**COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANYAKUMARI AT NAGERCOIL.**

02.01.2025

C.O.S. No. 2/2024

P.W.1 திரு. ராஜ பிரவீன்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பில்) -**

நான் இந்த விவரம் சொல்லி தான் பிராது தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தொியுமா என்றால் தொியும். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையில் உள்ள விவரங்களை பற்றி படித்து பார்த்தோ, எனது வழக்கறிஞர் சொல்லியோ தொிந்து கொண்டேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்த்து தொிந்து கொண்டேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்து நான் எந்த ஒரு ஆட்சேபனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் போட்டாரா என்று தொியாது. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில்தான் எனது தந்தை ஒப்பந்த பணிகளை மேற்கொள்ள முடியும் என்றால் சரிதான். எனது தந்தை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி போட்டிகளில் கலந்து கொண்டு ஒப்பந்த அடிப்படையில் எவ்வாறு வேலை செய்ய வேண்டும், அதற்கான தொகை எங்கிருந்து வருகிறது போன்ற விவரங்கள் எனது தந்தைக்கு தொியும் என்றால் ஒப்பந்த அடிப்படையில் எவ்வாறு வேலை செய்ய வேண்டும் என்று

தெரியும். அதற்கான தொகை எங்கிருந்து வருகிறது தெரியாது. Estimate படி வேலை செய்வோம். வா.சா.ஆ. 2 ஆவணத்தில் அந்த தொகை எப்படி எங்கிருந்து வருகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தற்போது தகவல் அறியும் சட்டத்தின் கீழ் நான் கேட்டுப் பெற்றது. வா.சா.ஆ. 3 ஆவணத்தில் Work Order அடிப்படையில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்தக்காரர்கள் அந்த பணிகளை செய்ய வேண்டும் என்றால் சரிதான். அந்த Work Order ல் கூடுதல் வேலை செய்ய அனுமதித்தோ, கூடுதல் வேலை செய்ய தொகை அனுமதித்தோ, குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேலையின் மதிப்பீடு ரூபாய் 5 கோடியே 50 இலட்சம் என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 ஆவணத்தின் படி அந்த வேலையை 30.01.2020 க்குள் அந்த வேலையை முடிக்க வேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 ஆவணத்தின் படி வேலையை முடித்து நானும், எனது அப்பாவும் ரூபாய் 5 கோடியே 50 இலட்சம் பிரதிவாதிகளிடமிருந்து பெற்று கொண்டோம் என்றால் வேலையை அந்த தொகைக்கு அதிகமாக செலவு செய்து முடித்துள்ளோம். ரூபாய் 5 கோடியே 50 இலட்சம் பெற்று கொண்டோம். மேலும் ரூபாய் 39,66,000/- வர வேண்டியுள்ளது. ரூபாய் 39,66,000/- கிடைக்க வேண்டும் என பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வா.சா.ஆ. 3 ஆவணத்தின் படி GST உட்பட எங்களுக்கு கிடைக்க வேண்டிய ரூபாய் 5 கோடியே 50 இலட்சத்தை நானும், எனது அப்பாவும் பெற்றுக் கொண்டு விட்டோம் என்றால் சரியல்ல. மேலும் அந்த தொகை வரவேண்டியுள்ளது. வா.சா.ஆ. 4 ஆவணம் எனது அப்பாவும், 1 ஆம் பிரதிவாதியும் வா.சா.ஆ. 3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள வேலை

தொடர்பாக செய்து கொண்ட ஒப்பந்தம் என்றால் சரிதான். ஒப்பந்தத்தில் கூடுதல் வேலை செய்ய வேண்டுமென்றோ, அதற்கான தொகை குறித்து குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பிரதிவாதிகள் கொடுத்த அந்த ஆவணத்தில் அந்த விவரம் இல்லை. அந்த ஒப்பந்த்தில் வேலை குறித்து எழும் பிரச்சினைகளுக்கு Arbitrator யிடம் முறையிட வேண்டும் என்று குறிப்படப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. பிரதிவாதிகள் ஒப்பந்தத்தில் கூறப்பட்ட பணிகளுக்கு மேலாக வேறு பணிகள் செய்ய வேண்டுமென எழுத்து மூலமாக உத்தரவு கொடுத்தார்களா என்றால் இல்லை. வாய்மொழியாக தான் சொன்னார். வாய்மொழியாக உத்தரவு கொடுத்தார் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 15.11.2022 ல் மட்டும்தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 07.10.2020 அன்று வழக்கிறஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 5 ஆவணத்தில் இரண்டாவது வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபாய் 84,00,000/- மீன்சந்தை கட்டுவது தொடர்பானது என்றால் சரிதான். மீன் சந்தை கட்டுவது சம்பந்தமாக ரூபாய் 14,54,955/- GST உடன் 08.01.2024 ல் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இரணியல் கிளை காசோலை எண். 199335 ன் படி வழங்கப்பட்டதற்கு GST போக ரூபாய் 13,65,287/- நான் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். ரூபாய் 1,45,045/- தான் மீன் சந்தை கட்டுமானம் தொடர்பாக எனக்கு பிரதிவாதிகள் தர வேண்டியுள்ளது என்றால் சரியல்ல. கூடுதலாக தர வேண்டியுள்ளது. அந்த தொகையை 10.01.2024 அன்று காசோலை மூலம் கொடுக்கப்பட்டு, நான் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

எனக்கு அவ்வாறு எந்த காசோலையும் வரவில்லை. என்னுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி மீன் சந்தை கட்டுமான வேலைக்கான மொத்த தொகை ரூபாய் 1 கோடி என்றால் சரிதான். அதன்பிறகு அந்த தொகை ரூபாய் 1,45,00,000/- ஆக அதிகரிக்கப்பட்டு, அந்த தொகை Estimate லும் திருத்தப்பட்டது. அதன் நகலை உதவி பொறியாளர் கையொப்பம் செய்து எங்களுக்கும் கொடுத்துள்ளார். ரூபாய் 1 கோடி 45 இலட்சத்துக்கு Estimate ல் அதிகரித்ததை காட்டும் ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல பஸ் ஸ்டாண்ட் வேலைக்கும், நாங்கள் Estimate லிருந்து அதிகமாக என்ன என்ன வேலை செய்துள்ளோம் என பார்த்து, அது குறித்து ஒரு ஆவணம் தயாரித்து அதிலும் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார்கள். மேலே சொன்ன இரண்டு ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு Estimate ல் திருத்தம் செய்து அதிக தொகை அதில் குறிப்பிட்டதாக என்னுடைய பிராதிலோ, முதல் பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு எந்த ஒரு ஆவணமும் பிரதிவாதிகள் தரப்பிலிருந்து எனக்கு தரவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. எனது அப்பாவிற்கு என்னை தவிர 3 அக்காள்கள் வாரிசுகள் என்றால் சரிதான். அவர்களுக்கும் என்னை போல எனது அப்பாவின் சொத்தில் உரிமை உண்டு என்றால் சரிதான். அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு அப்பா இறந்த பிறகு நான் ஒப்பந்ததரராக தொடர்ந்து செய்த வேலைக்கான தொகையை கூறி தாக்கல் செய்த

வழக்கு. M Book ல் மட்டும் அப்பா இறந்த பிறகும், அப்பா செய்ததாக தவறாக எழுதியுள்ளார்கள். அப்பா இறந்த பிறகு எனது சகோதரிகள் எனது அப்பா செய்ய வேண்டிய வேலையை செய்வதற்கும், அந்த பணி தொடர்பான பில்களுக்கு பணம் பெற்று கொள்வதற்கும், ஒரு அதிகார கடிதம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் கொடுத்ததுதான். அந்த ஆவணத்துடன் எனது தந்தையின் இறப்புச் சான்றிதழ், வாரிசு சான்றிதழ் மற்றும் எனது சகோதரிகள் எனக்கு கொடுத்த மேலே சொன்ன அதிகார கடிதம் ஆகியவற்றை இணைத்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். **அந்த ஆவணம் பி.வா.சா.ஆ. 1 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் உள்ள கடிதத்தில் எனது தந்தை ரூபாய் 5 கோடி 50 இலட்சம் மதிப்பில் பேருந்து நிலைய கட்டிடம் கட்டி வந்ததாகவும், அதில் 70% முடித்து விட்டதாகவும், அந்த நிலையில் எனது அப்பா இறந்து விட்டதால் நான் அதை தொடர்ந்து முடிக்க விரும்புவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். திங்கள் நகர் பேரூராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு பெற்றுள்ளதாகவும், மேலும் பேரூராட்சி வேறு ஏதாவது பணிகள் டெண்டர் கோரும்போது எனக்கு தபால்கள் அனுப்பும் படியும் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். மீன் சந்தை கட்டுமானத்தை வா.சா.ஆ. 9 படி 06.10.2021 க்குள் முடித்து கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ. 9 ஆவணத்தில் வேலையின் மதிப்பு ரூபாய் 1 கோடிதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ரூபாய் 1 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தின் படி எனக்கு வர வேண்டிய பாக்கி தொகை ரூபாய் 1,45,045/- என்றால் சரிதான். ஆனால் அதற்கு அதிகமாக Estimate போட்டு வேலை

செய்துள்ளேன். அதற்கான தொகையும் வரவேண்டியுள்ளது. நான் சொல்வது போல எனக்கு அதிகபடியான எந்த தொகையும் வரவேண்டியது இல்லை என்றால் சரியல்ல. 05.11.2022 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும் வரையில் அவ்வாறு நான் அதிகபடியாக வேலை செய்துள்ளேன் என்றோ, எனக்கு அதிக தொகை கிடைக்க வேண்டும் என்றோ கூறி 1 ஆம் பிரதிவாதிக்கோ, மற்ற பிரதிவாதிகளுக்கோ எந்த கடிதமும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அனுப்பியுள்ளேன். அப்படி அனுப்பியதாக காட்டும் எந்த கடித்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். எனது பிராதிலோ, முதல் விசாரணை சாட்சியத்திலோ அவ்வாறு கடிதம் அனுப்பியதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் அடிப்படையில் தான் பேருந்து நிலைய கட்டுமான வேலையையும், அதன்பிறகு ஒப்பந்தபுள்ளி போட்டியில் சேர்ந்ததால் மீன் சந்தை வேலையையும், 1 ஆம் பிரதிவாதி எனக்கு கொடுத்தார் என்றால் சரிதான். ஒப்பந்தப்படியும், Estimate படியும் நான் அந்த வேலைகளை முடித்து கொடுத்து விட்டேன் என்றால் முதலில் செய்த Estimate க்கு அதிகபடியாக வேலை செய்து கொடுத்துள்ளேன். பொதுமக்கள் போராட்டம் செய்தார்கள் அதனால் 1 ஆம் பிரதிவாதி கட்டாயப்படுத்தி, நான் அந்த கட்டுமான வேலைகளை செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொதுமக்கள் போராட்டம் நடத்தியதை காட்டும் எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன வேலைகள் முறைப்படி, உயர் அதிகாரிகளின் உத்தரவு பெற்று, அதற்கான நிதி ஒதுக்கீடு பெற்று

எனக்கு கொடுக்கப்பட்டது என்றாலும் அதற்கு அதிகபடியாக வேலை செய்ய பிரதிவாதிகள் யாரும் எனக்கு உத்தரவு கொடுக்கவில்லை என்றாலும் அப்படி அதிகப்படியாக வேலை செய்ய எனக்கு உரிமை இல்லை என்றாலும் திங்கள்சந்தை பஞ்சாயத்தின் மன்ற தீர்மானம் வைத்து, Estimate தயார் செய்து, அதிகப்படியான வேலை செய்வதற்கு எனக்கு ஒரு நகல் கொடுத்தார்கள். அந்த நகல்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். அவ்வாறு மன்றத்தின் தீர்மானம் செய்யப்பட்டதாகவோ, அதன் நகல்கள் என்னிடம் கொடுக்கப்பட்டதாகவோ, என்னுடைய பிராதிலோ, முதல் விசாரணை சாட்சியத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 12 வது பத்தியில் ரூபாய் 11,66,604/- அதிகபடியான தொகை எனக்கு வழங்க வேண்டும் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று கூறியுள்ளேன் என்றாலும் 13 வது பத்தியில் பொறியாளரை வைத்து கணக்கீடு செய்த தொகை ரூபாய் 28,00,000/- த்திற்கான வேலை அதிகபடியாக செய்து, கணக்கீடு செய்யப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எந்த தேதியில், எந்த மாதத்தில் அவ்வாறு கணக்கீடு செய்தார்கள் என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தேதி ஞாபகம் இல்லை. இரண்டும் சேர்த்து எனக்கு வர வேண்டிய தொகை ரூபாய் 39,66,604/- என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு கணக்கீடு எதுவும் செய்யாததால்தான் தேதி, மாதம் போன்ற விவரங்களை என்னால் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. பத்தி 17 ல் இவ்வாறாக பிரதிவாதிகள் ரூபாய் 65,00,000/- தர கடமைப்பட்டவர்கள் என எதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன்

என்றால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. 18 வது பத்தியில் பேருந்து நிலைய கட்டுமான பணிக்காக ரூபாய் 39,66,604/- தர வேண்டியள்ளது என்றும், மீன் சந்தை கட்டி முடிக்கப்பட்டதில் அதிகபடியான ரூபாய் 61,00,000/- எனக்கு வழங்கவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஜனவரி 2024 ல் தான் மீன் சந்தை கட்டுமானம் தொடர்பாக சுமார் 14 இலட்சம் கொடுத்தார்கள். பிராது அதற்கு முன்பாகவே தாக்கல் செய்யப்பட்டது அதில் இந்த தொகையும் சேர்த்து ரூபாய் 61,00,000 என குறிப்பிடப்பட்டுள்ளது. அதேயே முதல் விசாரணை வாக்குமூலத்திலும் தவறாக குறிப்பிட்டுள்ளார்கள். நான் அவ்வாறு தவறாக சொல்கிறேன் என்றாலும் எனக்கு பிரதிவாதிகள் எந்த தொகையும் தர வேண்டி இல்லாததால்தான் இவ்வாறு முன்னுக்கு பின் முரணாக தொகையை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 21 வது பத்தில் பிரதிவாதிகள் என்னிடம் எந்த வழக்கும் தாக்கல் செய்ய வேண்டாம் என்றும், பிரச்சினைகளை விரைவில் முடித்து பணத்தை திருப்பி தரலாம் எனவும் உத்தரவாதம் அளித்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு எந்த தேதி, மாதத்தில் உத்தரவாதம் அளித்துள்ளார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் வாய் மொழியாகதான் சொன்னார்கள். பிரதிவாதிகள் அவ்வாறு எந்த உத்தர வாதமும் கொடுக்கவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும்சரியல்ல. ரூபாய் 1,00,66,604/- தர வேண்டும் என காண்பிப்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆவணங்கள் என்னிடம் உள்ளது. முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ள உள்ள விவரங்கள்

அனைத்தும் தவறானது என்றாலும் பிரதிவாதிகளக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு எந்த மூலக்காரணமும் இல்லை என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மீன் சந்தை கட்டுமானத்திற்காக நான், 1 ஆம் பிரதிவாதியுடன் செய்து கொண்ட ஒப்ந்தத்தின் நகல் என்றால் சரிதான். அது முதலில் போட்டுக்கொண்டது. அதற்கு பிறகு தொகையை அதிகரித்து Estimate தயார் செய்யப்பட்டது. **அந்த ஆவணம் பி.வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பி.வா.சா.ஆ. 2 ஆவணத்தில் ஒப்பந்தத் தொகை ரூபாய் 1 கோடி எனதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 2 ல் உள்ள அதே நிபந்தனைகள் தான் எனது தந்தை செய்து கொண்ட வா.சா.ஆ. 4 ஒப்பந்தத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. வா.சா.ஆ. 4 ஆவணத்தை நான் படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ. 2 ஆவணத்திலும் வேலை தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டால் Arbitrator ஐ அணுக வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும், எல்லோருக்கும் கடிதம் போட்டேன். அதன்பிறகு அதிகபடியான வேலைக்காக போடப்பட்டதாக சொல்லும் Estimate ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 ற்கு பிறகு அதிகபடியான வேலைக்காக Estimate போடப்பட்டதாக பிராதிலும், என்னுடைய முதன்மை சாட்சியத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தேவையான தரப்பினர் சேர்க்கப்படததால் நிலைக்கதக்கதல்ல

என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றாலும் வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றாலும் சரியல்ல.